விலை சதம் 25 Registered as a Newspaper in Sri Lanka ★ ★

25 JUL 1974 — UNDERGRADUATE LIBRARY

# ஈழநாடு

மலர் 16 The Eelanaadu இதழ் 150

ஆனி 29 ஐ. ஆனி 22 சனிக்கிழமை 13-7-74


**நவீன கணிதம்**

(தபால் மூலம்)

குறைந்த செலவில், சிறந்த முறையில் 6-ம், 7-ம், 8-ம் வகுப்புகளுக்கும், தேசிய கல்வித்தராதர வகுப்பிற்கும் (NCE), ஆசிரியர்களுக்கும், ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கும் தபால் மூலம் போதிக்கப்படும்.

மாலையில் நடைபெறும் வகுப்புகள் 5 முதல் 8 மணி வரை நடைபெறும் விபரங்களுக்கு:-

மொடேர்ண் எட்யூகேஷன் சென்ரர்

நெல்லியடி—கரவெட்டி


அம்பாறை தொழில் நுட்பக் கலலூரி

# தமிழ்மாணவர்கள் தாக்குதல் பற்றி பிரதமர் விசாரணை

## வகுப்புகளுக்கு திரும்புமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

அம்பாறை தொழில் நுட்ப நிலையத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் அசம்பாவித சம்பவங்கள் குறித்துப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா விசாரணை நடாத்தவுள்ளார்.

இது சம்பந்தமாகப் பிரதமர் உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் இச்சம்பவங்கள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இது தொடர்பாகக் கல்லூரிக்குச் சமுகமளிக்காமலிருக்கும் சகல மாணவர்களும் வகுப்புக்களுக்குச் செல்வது நல்லதென்று பிரதமர் தமது கடிதத்தில் ஆலோசனை கூறியுள்ளார்.

மேற்படி கல்லூரியில் தமிழ்ச் சங்கம் அமைத்தது தொடர்பாக எழுந்த சச்சரவில் சில தமிழ் மாணவர்கள் படுமோசமாக தாக்கப்பட்டதாகவும் இது குறித்து உடனடி விசாரணையொன்று நடாத்தப்பட வேண்டுமென்றும் தமிழ் எம். பி.க்கள் பலர் பிரதமரிடம் கோரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே.

இது இவ்வாறிருக்க கல்லூரிக்கு சமுகமளிப்பது குறித்து ஆராயும்பொருட்டு மேற்படி கல்லூரி மாணவர்கள் இன்று காலை யாழ்ப்பாணம் முனீஸ்வரன் ஆலயத்திற்கு அண்மையில் கூடி முடிவுசெய்யவிருப்பதாக தெரியவருகிறது. (ஈ)

## தடைநீக்கம்

கொழும்பு, வெள்ளி

பாடசாலைகளின் கொண்டாட்டங்களுக்கு கல்வி அமைச்சு விதிக்கப்பட்டிருந்த தடை இப்போது நீக்கப்பட்டுள்ளது.

போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள், கல்விச் சுற்றுலாக்கள், விளையாட்டு விழாக்கள் என்பனவற்றை இவ்வருடம் மூன்றாம் தவணைமுதல் நடத்த அனுமதிப்பது என கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

இன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 478 வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

1-வது பரிசு

05 Y 0646 ரூபா 64,750

2-வது பரிசு

20 N 0108 ரூபா 25,900

3-வது பரிசு

23 K 0358 ரூபா 6,475

தலா ரூபா 323-75 சதம் பெறும் 100 ஆறுதல் பரிசுகள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 05 A 0707 | 14 A 0706 |
| 24 A 0216 | 03 B 0240 |
| 18 B 0940 | 19 B 0182 |
| 20 B 0564 | 24 B 0184 |

(5-ம் பக்கம் பார்க்க)

## இன்றும், நாளையும் நள்ளிரவு வரை விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகரசபை வெள்ளிவிழாவை யொட்டி, வடபகுதியில் பல்வேறு இடங்களுக்கும் இன்றும் நாளையும் நள்ளிரவு 11-30 மணி வரை விசேஷ பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இருப்பிட்டி, மானிப்பாய், கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, கொழும்புத்துறை, கச்சேரி, அரியாலை, கைதடி, அச்சுவேலி, புத்தூர், நெல்லியடி, நுணாவில், நாவற்குழி, ஆகிய இடங்களுக்கு இன்றும்நாளையும் விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (க. அ)

## 50 ஊர்திகள் பவனி வரும்

யாழ்ப்பாணம், சனி

யாழ்.மாநகரசபை வெள்ளி விழாவையொட்டி நாளை காலை நடைபெறும். அலங்கார ஊர்திகள் பவனியில் சுமார் 50 ஊர்திகள் இடம் பெறும்.

அலங்கார ஊர்திகள் காலை 7-30 மணிக்கு புறப்பட்டு நகர வீதிகள் வழியாக பவனிவரும்.

இந்த ஊர்திகள் பவனியில் கலந்து கொள்வதற்குமேலும் பல விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக வெள்ளி விழாக் குழுவினர் தெரிவித்தனர்.

வீதி ஓரங்களில் மக்கள் நின்று ஊர்திகளை பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. (க-அ)

யாழ். மாநகரசபை வெள்ளிவிழா

## இன்று முற்றவெளியில் மாட்டு வண்டிப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

யாழ். நகரசபை வெள்ளி விழாவையொட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். முற்றவெளி மைதானத்தில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இடம்பெறும்.

வெள்ளிக் கிண்ணங்களுக்காக நடைபெறும் இப்போட்டியில் வடபகுதியில் நடந்த சவாரிகளில் பரிசுகள் பெற்ற பலவண்டிகள் கலந்துகொள்ளுகின்றன.

இப்போட்டி, இரட்டை மாட்டுவண்டி, திருக்கல் வண்டியென இரு பிரிவுகளாக நடைபெறும். இவற்றில் இரட்டைமாட்டு வண்டிப் போட்டி இரு பிரிவுகளாகவும் திருக்கல்வண்டிப் போட்டிகள் தனிப்போட்டியாகவும் நடைபெறும். (க-அ)

## குருநகரில் அலங்கார படகுகள் பவனி!

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் முதற்தடவையாக நாளை இரவு மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட படகுகள் பவனி, யாழ் மாநகர சபை வெள்ளி விழாவையொட்டி நடைபெறும்.

இப்போட்டியில் சுமார் 100 படகுகள் கலந்துகொள்ளும்.

குருநகர் சுங்கப்பகுதிக்கு முன்னால் உள்ள கடலில் இப்போட்டி இடம்பெறும்.

நாளை காலை 7 மணிக்கு நீச்சல் போட்டியும், காலை 9 மணிக்கு வள்ளம் தாண்டல் போட்டியும் நடைபெறும். இப்போட்டிகள் குருநகர் இறங்கு துறையில் இடம் பெறும்.

அந்திரான் கலட்டியில்

## 50 வாலிபருக்கு காணி

பருத்தித்துறை, வெள்ளி

"கரணவாய் தெற்குப்பகுதியிலுள்ள அந்திரான் கலட்டி என்னுமிடத்தில் காணியற்ற ஐம்பது வாலிபர்களுக்குக் காணி வழங்க அரசாங்கஅதிபர் உத்தரவுவழங்கியுள்ளார். இப்பகுதியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இக்காணி கள் பகிர்ந்தளிக்கப்படும்"

இத்தகவலை வடமராட்சி தெற்கு-மேற்கு காரியாதிகாரி திரு. கே. மாணிக்கவாசகர் நமது நிருபரிடம் தெரிவித்தார். (அ)

## யாழ். நகரில் புதிய வெளிநோயாளர் பகுதி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பகுதியிலுள்ள இட நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டு முன்னர் திட்டமிட்டுப் பின்னர் நிறுத்திவைக்கப்பட்ட புதிய வெளிநோயாளர் பகுதிக்கான கட்டட அமைப்புவேலைகள் மீண்டும்விரைவில் ஆரம்பிக்கப்படுமென அறியப்படுகிறது.

பெரியாஸ்பத்திரியிலுள்ள தற்போதைய வெளி நோயாளர் பகுதிக்கு அருகே ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடத்தையும் இணைத்து புதிய வெளிநோயாளர் பிரிவு அமைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுசம்பந்தமாக சுகாதார அமைச்சர் திரு. டபிள்யு பி. ஜி ஆரியதாசவுடன் யாழ். நகர மேயர் திரு. அல்பிரட் துரையப்பா பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

## பஸ் பிரயாணி திடீர்மரணம்

### அவரை அடையாளம் தெரியுமா?

யாழ்ப்பாணம், சனி

பஸ்ஸில் பிரயாணஞ்செய்துகொண்டிருந்தவர் திடீரென நோய்வாய்ப்பட்டு மரணமானார் இப்பரிதாபச் சம்பவம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் கண்டாவளை பஸ்ஸில் நிகழ்ந்தது.

'தெ' என்ற சலவைக்குறி பதிக்கப்பட்ட மெல்லிய நீலக்கரை வெள்ளை வேட்டியும், வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்த சுமார் ஐம்பது வயது மதிக்கக்கூடிய கறுப்பு நிறம் உடைய ஐந்தரை அடி உயரமான அந்தப் பிரயாணியின் சடலம் இப்போது யாழ்ப்பாண ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாம்.

கிளிநொச்சிக்கு டிக்கட் எடுத்துக்கொண்டு நேற்று அதிகாலை கண்டாவளைக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறிய அவர் கைதடிக்குச் சமீபமாக வந்ததும் வலி வந்து அவதிப்பட்டாரென்றும் பின்னர் அவர் உடல் குளிர்ந்த நிலை விழுந்து காணப்பட்ட அவரை சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றபோது அவர் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டதாக மரணவிசாரணையில் சாட்சியமளித்த பஸ் சாரதி, பஸ் கண்டக்டர், மற்றொரு பிரயாணி ஆகியோர் தெரிவித்தனர்.

மரண விசாரணை நடாத்திய சாவகச்சேரிப் பகுதி மரணவிசாரணை அதிகாரி

(5ம் பக்கம் பார்க்க)

## இந்தியா பற்றிய விவரணப்படம்

சென்னை, ஜூலை 12

இலங்கை ஒலிபரப்பு, தகவல் அமைச்சர் திரு. ஆர். எஸ். பெரேராவுக்கு "அவர் இந்தியா" ('நமது இந்தியா') என்ற பெயரிடப்பட்ட விவரணப்படச்சுருள் ஒன்றை இந்திய ஒலிபரப்பு தகவல் துணை அமைச்சர் திரு. தரம் வீர்சிங்கா இன்றுஅன்பளிப்பு செய்தார். திரு. பெரேரா இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்களின் தொகுப்பு ஒன்றும் அவரிடம் கொடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### கல்வி

எமது ஆங்கிலப் பாடங்கள் தமிழ்விளக்கம் கொண்டவை. வினா, விடைகள் அடங்கியவை. பரீட்சையில் சித்தி நிட்சயம் றெக்ஸ் ரியூட்டறி, யாழ்ப்பாணம். 235

### விற்பனைக்கு

ஜி. சி. ஈ வகுப்பு தூய கணிதம் II 1968—1972 வினாக்கள் மாதிரி விடைகள் விலை 3 ரூபா. ஸ்ரீ காந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். 325

### தேவை

யாழ்நகரில் ஓர் வர்த்தக ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர் தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 177 C/o ஈழநாடு த. பெ. எண்: 49, யாழ்ப்பாணம். 177

அனுபவமுள்ள சேல்ஸ்மென் இருவர் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் சமுகந்தரவும். நாகன்ஸ், நவீனசந்தை, யாழ்ப்பாணம். 352

## கேள்வி விளம்பரம்

### மாந்தை மேற்குக் கிராமச்சபை, திருக்கேதீச்சரம்

1. மாந்தை மேற்குக் கிராமச்சபைப் பிரதேச சுரு விற்பனை.

2. கண்டல் தாய் சேய் பரிபாலன நிலையக் கட்டிடம்.

25-7-74 ம் திகதி காலை 10-00 மணிவரை பின்வரும் வேலைகளுக்குச் சீல் வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 24-7-74 ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை மேற்படி கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இன்ன வேலைக்கான கேள்வி எனக் குறிப்பிடப்படவேண்டும்.

1. 1974-ம் ஆண்டுக்குரிய மா. மே. கி. ச. பிரதேச சுரு விற்பனைக்கான கேள்விப் பத்திரத்தை மேற்படி கந்தோரில் 10/-ரூபா வைப்புப் பணமும் 5/-ரூபா பத்திரப் பணமும் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியின் ஒரு பிரதி மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்புதல்வேண்டும்.

2. கண்டல் தாய் சேய் பரிபாலன நிலையக் கட்டிட வேலைக்கான கேள்விப்பத்திரத்தை மேற்படி கந்தோரில் 50/-ரூபா வைப்புப் பணமும், 25/-ரூபா பத்திரப் பணமும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியின் ஒரு பிரதி மன்னார் நிறைவேற்றுப் பொறியியலாளருக்கும், மறுபிரதி மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்புதல்வேண்டும். மேலதிக விபரங்கள் யாவும் மாந்தை மேற்குக் கிராமச்சபையில் பெற்றுக்கொள்ளலாம்.

பி. பர்ணாந்து
தலைவர்,
மாந்தை மேற்குக்
கிராமச்சபை,
திருக்கேதீச்சரம்.

9—7—1974 182

### தவறிவிட்டது

11-7-74 காலை யாழ்ப்பாணம் கோட்டுக்கு அண்மையில் X 140942 இலக்க அரிசிப் பங்கீட்டுப் புத்தகம். கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தகவல் தரவும். ஆ. குணசே. 50, இராசலிங்கம் வீதி, குருநகர், யாழ்ப்பாணம் 351

### விற்பனைக்கு

கொக்குவில்-யாழ் நகர் எல்லைக்கு அண்மையில் ஆறு இலாச்சத் தரையுடன் வீடு. புகையிரத நிலையம், தபாற்கந்தோர், பாடசாலைகள் சமீபம். ரூபா 65,000. பிராஜ்மன் என்ரப்பிறைசஸ், 213/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 302

நல்ல நிலைமையில் உள்ள செவலெட் லொறி CV 4810 விற்பனைக்கு உண்டு. உழவு இயந்திரத்திற்கும் மாற்றிக் கொடுக்கலாம். நேரில் வரவும். G. J. 48, இராசாவின் தோட்டம் றோட், யாழ்ப்பாணம். 341

கொன்சல் 1 ஸ்ரீ கார் விற்பனைக்குண்டு. ரூபா 33,000/-க்கு கொடுக்கலாம். விண்ணப்பிக்கவும். நைல்ஸ் உடுவில் தபாற்கந்தோருக்கு முன்னிலையில். 354

### நன்றி நவிலல்

எங்கள் அன்புத் தாயார் திருமதி குமாரசாமி நாகம்மா 30-6-74-ல் காலமாகிவிட்டார். மரண இறுதிக் கிரியையில் கலந்தும், அனுதாபச் செய்திகளை அனுப்பிவைத்தும் ஆறுதல் கூறிய அன்பர்கள் அனைவருக்கும் நன்றிசெலுத்துகின்றோம்.

இங்ஙனம்,
கு. தர்மராஜாவும்,
சகோதரர்களும்,
(குடும்பத்தினரும்)
67, பலாலிவீதி,
யாழ்ப்பாணம். 179

### கேள்வி விளம்பரம்

மல்லாகம் கிராமசபைத் தலைவரால் கீழ்க்காட்டப்படும் வேலைக்கு 29-7-74 காலை 10 மணிவரை முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வேலை விபரம்

அளவெட்டி கணக்கர்வளவு விவசாய ஒழுங்கை திருத்த வேலை. (அரசினர் நன்கொடை)

கேள்விப்பத்திரப் பணம் ரூபா 10/-

கேள்விப்பிணைப் பணம் ரூபா 50/-

25-7-74 பி. ப. 1.00 மணிவரை உத்தியோகபூர்வமான கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை கிராமசபை அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

வ. பொன்னம்பலம்,
தலைவர்,
கிராமசபை,
மல்லாகம். 181

### சங்காபிஷேகம்

மாவிட்டபுரம், வெள்ளி

கவிவிட்டி ஸ்ரீமுருகமூர்த்தி ஆலய மகாசங்காபிஷேக விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஆலய அர்ச்சகர் பிரமஸ்ரீ நாராயணசர்மாவின் அருபுதல்வன் செல்வன் பத்மநாதனினதும், செல்வன் சிவலிங்க சர்மாவினதும் உபநயன விழாவும் அன்று நடைபெற்றது. பிரதிஷ்டா பூஷணம் நயினை ஐயர் நாதக்குருக்கள் நடாத்திவைத்தார். (அ)

1973-ம் ஆண்டின் 44-ம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 283-ம் பிரிவின் கீழ் மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்குவதற்கான

## இடைக் காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

புன்னாலைக்கட்டுவன், புன்னாலைக்கட்டுவன் தெற்கிலிருந்து மரணசாதனமெழுதாது காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை இராசையாவின் ஆதனங்களும் மற்றும் பெருமதிகளும் சம்பந்தப்பட்டவை.

யாழ்ப்பாணம் பகுதி இல. 19 ரி.

சங்கரப்பிள்ளை இராசையா கமம்பெண் சின்னம்மா, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் விண்ணப்பகாரர்

எதிராக

1. இராசையா மகள் ஜெகதாம்பாள்,
2. இராசையா தவபாலன்.
3. இராசையா மகள் இரதிதேவி.
4. இராசையா மகள் உமாதேவி,
5. இராசையா மகள் உஷா.
6. சங்கரப்பிள்ளை இராசரத்தினம் - 2-ம், 3-ம், 4-ம், 5-ம் பிராயமற்ற பிரதிவாதிகளின் பாதுகாவலர் - எல்லோரும் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் - பிரதிவாதிகள்

1974-ம் ஆண்டு ஆனி மாதம் 17-ந் திகதியைக் கொண்ட விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய உறுதிக்கூற்றுகள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதெனத் திருப்தியடைந்ததின் பேரில், மேலதிக பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் எம். ஏ. எல்லப்பொல ஆகிய நான் கட்டளையிடுகிறதாவது:

இக்கட்டளையின் அறிவித்தலைப் பெற்ற எவராவது அல்லது வேறு எவராவது 1974-ம் ஆண்டு ஆடி மாதம் 16-ந் திகதி அல்லது அதற்கு முன் தக்க காரணம் காட்டி ஆட்சேபம் தெரிவித்தாலன்றி.

அ. மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவர் விட்டுச்சென்ற மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கும் மற்றும் பெருமதிகளுக்கும் நிருவாகத் தத்துவப் பத்திரம் பெறுவதற்கு மேற் சொல்லப்பட்ட விண்ணப்பகாரியே மேற் சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் கைம்பெண் என்ற வகையில் உரித்துடையவர் என்றும் அவ்வண்ணமே அவருக்கு நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படுகிறதென்றும்

ஆ. இம்மரணச் சொத்து நடவடிக்கை சார்பாக மேற்குறிப்பட்ட 6-ம் பிரதிவாதியை பராயமற்ற 2-ம், 3-ம், 4-ம், 5-ம் பிரதிவாதிகளின் பாதுகாவலராகவும் நியமிக்கப்படுகின்றார் என்றும் இத்தால் 283 (1) (2)-ம் பிரிவின் கீழ் கட்டளையிடுகிறேன்.

1974-ம் ஆண்டு ஆனி மாதம் 17-ந் திகதி. 180

ஒப்பம்
சோ. இராசநாதன்,
பகிரங்க நம்பிக்கைப்
பொறுப்பாளருக்காக.

வரைந்தவர்
[illegible]
சட்டத்தரணி,

பருத்தித்துறை சட்டத்தரணிகள் கோரிக்கை:

## பருத்தித்துறைக்கு மேலதிக நீதிமன்றம் அவசியம்

பருத்தித்துறை, வெள்ளி

"பருத்தித்துறைப் பகுதியில் ஒரு மேலதிக நீதிமன்றம் இன்றியமையாதது என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். போதிய பல வசதிகள் இருந்தும் இங்கு ஒரு நீதிமன்றம் இன்னும் அமைக்கப்படாதது கவலைக்குரிய விடயமாகும்."

இவ்வாறு வடபகுதிக்கு விஜயம் செய்த நீதிஅமைச்சர் திரு பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகாவுக்கு பருத்தித்துறை சட்டத்தரணிகளால் அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தின் போது அமைச்சரிடம் சட்டத்தரணிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்கு அமைச்சர் திரு. பண்டாரநாயகா பதிலளித்துப் பேசுகையில் தாம் கொழும்பு சென்றதும் ஆலோசனை செய்து முடிவு காண்பதாகத் தெரிவித்தார்.

பருத்தித்துறை சட்டத்தரணிகளை பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பருத்தித்துறைக் கிளைப் பிரதான அமைப்பாளருமான திரு, ந. நடராசா அமைச்சருக்கு அறிமுகம் செய்துவைத்தார். (அ)

### விசேஷமாய்க் கூடுவர்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மார்க்க பலநோக்குக் கூட்டுறவுச்சங்க விசேஷ பொதுக் கூட்டமொன்று எதிர்வரும் செவ்வாயன்று காலை சங்கக் காரியாலயத்தில் சங்கத்தலைவர் திரு. அ. த. துரையப்பா தலைமையில் நடைபெறவுள்ளது. (த-அ)

### ஈழத்துச் சிதம்பரத்தில் புராணபடனம்

யாழ்ப்பாணம், சனி

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை தொடக்கம் எதிர்வரும் 21ம் திகதிவரை ஈழத்துச் சிதம்பரபுராண படனம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. தொழிலதிபர் மு. பொன்னுத்துரையின் ஆதரவில் ஆலயமண்டபத்தில்நிகழும் இப்புராணபடனநிகழ்ச்சியில் வித்துவான்கள் மு. சபாரத்தினம், க. முருகேசன் உட்பட ஒன்பதுபேர் புராணபடனம் ஓதுவார்கள். பௌராணிகவித்தகர் சிவத்திரு வ. குகசர்மா உரை சொல்லுவார். திரு. ந. சபாரத்தினம் புராணபடனத்தை ஆரம்பித்துவைப்பார்.

நாளை தேவிமகோற்சவமும் இம்மாதம் 22ம்திகதி ரதோற்சவமும் அடுத்தநாள் தீர்த்த விழாவும் நிகழும். (அ)

### ஐயாறன் —

6-ம்பக்கத் தொடர்ச்சி

என்று கந்தபுராணம் நமக்கு உறுதி கூறுகின்றது.

இந்த கும்பாபிஷேகத்துக்குப்பின், அப்பகுதி மக்களிடையே அன்பு பெருகி உயர்வு தாழ்வு பேதங்கள் நீங்கி, மூடப்பட்டுள்ள கோவிலும் திறக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் செய்வாராக.

ஈழத்துச் சிதம்பர புராண படனம் நாளை ஞாயிறு முதல் 21-ந் திகதிவரை காரைநகர் சிவன் கோவிலில் நடைபெறுகிறது. ஈழத்தில் வேறெந்தக் கோயிலிலும் இல்லாதபடி, இங்கு இந்த புராணம் படிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றிக்குக் காரணம், அங்குள்ள ஊழியர்களே. அவர்களில் பலரும் பக்தியுடன் அங்குள்ள காக்கும் தெய்வமான வைரவரை தினம் வணங்குகின்றனர். திருக்கேதீச்சரத்தில் பிள்ளையார் கோயில் திருப்பணி செய்தவர்களும் இவர்களே யாவர்.

### இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம், சனி

இந்திய-இலங்கை இணைப்பு இயக்கத்தினரின் வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதன் தமிழரின் எதிர்காலம் சுபிட்சத்துக்குரிய ஒரே வழி என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு இன்று மாலை நாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. (அ)

லாலா சோப் ஸ்தாபனத்தாரின்

2-வது மாபெரும் நாடகப் போட்டி

விண்ணப்பித்த நாடகங்களில் பின்வரும் மிகச் சிறந்த 7 நாடகங்கள் மேடையேற்றத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இதில் வெற்றிபெறும் முதல் 3 நாடகங்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

இடம்: அச்சுவேலி மகாவித்தியாலயம்
திகதி: 27-7-74

1. புத்தூர் பம்பல் நாடகமன்றம் அளிக்கும் "தூய உள்ளம்"
2. மாவை புதுமலர்ச்சி மன்றம் அளிக்கும் "ஏன் இந்த அவலம்"
3. சீமெந்து தொழிற்சாலை நாடகக்கலாமன்றம் அளிக்கும் "நக்கீரர்"
4. ஆவரங்கால் சிவாலய நாடகமன்றம் அளிக்கும் "தங்கப் பதக்கம்"
5. வல்வெட்டித்துறை ஹெவியன்ஸ் நண்பர்கள் அளிக்கும் "பாதுகாப்பு"
6. கரவை இளைஞர் முத்தமிழ் கலாலயம் அளிக்கும் "நீரலை"
7. புலோலி இளைஞர் நன்னெறிக் கழகம் அளிக்கும் "அந்தரங்கம்"

மதீன்புரொடக்ஷன்ஸ் அளிக்கும் A. மகாதேவனின் "சிவசக்தி நடனம்"

லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★★ யாழ். மாநகரசபை வெள்ளி விழாச் சிறப்பிதழ் ★☆

# யாழ். நகரின சரித்திரம்

## மேயரின் செய்தி



யாழ். மாநகரசபையின் இந்த வெள்ளிவிழா கொண்டாடும் இருபத்தைந்து வருட காலத்தில் நான் அங்கத்தவராகவும், துணைமேயராகவும், மேயராகவும் நெருங்கிய தொடர்பு கொண்டவனாக இருந்து வந்திருக்கிறேன். சபையில் மாறுதல் ஏற்பட்டு வந்த போதிலும், முழுமையாகப் பார்க்கும்போது கடந்த 25 வருட காலத்தில் அதன் சேவை குறித்து பெருமைப்படுவதற்கு நல்ல சான்றுகள் உள்ளன.

மாநகரசபையின் சேவைகள் திறமையான முறையில் கவனிக்கப்பட்டு செயல்பட்டு வந்துள்ளன. எமது நகரம் மிகவும் சுத்தமானதாகவும், சுகாதாரம் வாய்ந்ததாகவும் திகழ்கிறது. விஸ்தீரணமான எல்லையைக் கொண்ட வீதிகள் நல்ல முறையில் பேணிப் பராமரிக்கப்பட்டு மின்னொளி ஏற்றப்பட்டு அழகு காட்சி தருகிறது. இலங்கையின் மற்றைய பகுதிகளிலிருந்தும், உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் வருபவர்கள் யாழ் நகரத்தைப் பற்றிய தமது கருத்தை இப்படி வெளியிட்டுள்ளார்கள்.

மற்றும் பலவிதமான சேவைகளை யாழ் மாநகரசபை மக்களுக்குச் செய்திருக்கிறது. நகரின் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதிக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் கிடைக்க வசதி செய்துள்ளோம். மிகுதிப் பகுதிக்கு விரைவில் குழாய் மூலம் குடிதண்ணீர் கிடைக்கவுள்ளது. யாழ்ப்பாணத்தில் குடிதண்ணீர் பெறுவதிலுள்ள கஷ்டத்தை உணர்ந்தவர்கள்தான் இந்த எமது இந்த முயற்சியைப் பாராட்டுவார்கள்.

சேரிகளை ஒழித்தோம்; ரோட்டுகளை விஸ்தரணப்படுத்தினோம்; விளையாட்டரங்கையும் பஜாரையும் நவீன முறையில் வசதியாக மாற்றி அமைத்துள்ளோம். மின்சார விநியோகத்திலும், மின்னொளியிலும் படிப்படியாக முன்னேறி வருகிறோம்.

வீடமைப்புத் திட்டங்களை பூர்த்தியாக்கியிருக்கிறோம். நவீன சந்தையும், பொது நூலகமும் யாழ் நகருக்கே பெருமையளிக்கக்கூடிய விஷயங்களாகும்.

யாழ். மாநகரசபையின் பராமரிப்பில் கிளினிக்குகளும் வைத்திய நிலையங்களும், பூங்காக்களும், விளையாட்டரங்குகளும் இருக்கின்றன. இலங்கையில் சிறந்த ஸ்டேடியங்களில் ஒன்றாக யாழ். ஸ்டேடியம் விரைவில் திகழப் போகிறது. இந்த முக்கிய திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதில் எனக்கு முக்கிய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது எனக்கு தனிப்பட்ட முறையில் திருப்தியையும், மகிழ்ச்சியையும் அளிக்கிறது.

யாழ். நகர முன்னேற்றத்துக்கு செய்யப்படவேண்டிய செயல்காரியங்கள் பல

(யாழ். நகரின் வரலாற்றினைப்பற்றி கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா எழுதியுள்ள ஆங்கிலக்கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட சில தகவல்கள்.)

இலங்கையின் வட பிரதேசம் ஆரம்பகாலத்தில் நாகதீபம் எனவும் அழைக்கப்பட்டது.

இப்பிரதேசத்தின் முதல் ஆளுநர்கள் தீபராஜாக்கள் என அழைக்கப்பட்டனர். இதற்கு முந்திய அரசர்களும் கூட இவ்வாறே அழைக்கப்பட்டனர்.

மத்தியகாலத்தில் வடக்கில் சுதந்திர ராஜதானி அமைவதற்கு முன்பதாக யாழ்ப்பாணமோ வேறு எந்த நகரமோ வடக்கின் தலைநகராக விளங்கியதாக ஆதாரம் இல்லை. 13-ம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் யாழ்ப்பாணம் ராஜதானி நிறுவப்பட்டது. இது நிறுவப்பட்டபோது சிங்கைநகர் என்ற நகரம் அதன் தலைநகராக விளங்கியதாகத் தெரிகின்றது. நல்லூர் பற்றிய ஆரம்பகால தமிழ் நூல்கள் கல்வெட்டுக்களால் எங்கும் குறிப்பிடப்படவில்லை. இந்நகரிலிருந்தே ஆரிய சக்கரவர்த்திகள் ஆட்சிபுரிந்துள்ளனர். எனவே சிங்கைநகர் முதல் தலைநகரமாகவும் அடுத்து யாழ்ப்பாணம் இரண்டாவது தலைப்பட்டினமாகவும் விளங்கியதாகவும் கொள்ளலாம்.

16-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்த்துக்கேயர் இந்த நாட்டிற்குள் வந்தபோது யாழ்ப்பாண மன்னர்களின் ராஜதானியாக நல்லூர் விளங்கியுள்ளது என்ற செய்தி போர்த்துக்கேய ஆதாரங்களில் காணக்கூடியதாகவிருக்கிறது.

சிங்கைநகர், யாழ்ப்பாண பட்டினம் நல்லூர் ஆகிய மூன்றும் இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் குறிக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று பெயர்களும் ஒரே இடத்தை அல்ல ஒன்றுக்கொன்று அருகருகாமையிலுள்ள இடங்களைக் குறிப்பனவாகவுள்ளன என்ற விபரம் ஆராய்ச்சியிலிருந்து அறியமுடிகின்றது.

போர்த்துக்கேயர் ஊடுருவலின்பின் கடைசி அரசனின் மாளிகை இருந்த இடம் நல்லூர் எனத் தனியாக அழைக்கப்படலாயிற்று போர்த்துக்கேயர் ஆக்கிரமித்துக் கொண்ட பகுதி யாழ்ப்பாணம் என்று அறியப்படலாயிற்று. எனவே மத்தியகாலத் தமிழ் அரசர்களின் காலத்திலிருந்து யாழ்ப்பாண நகரின் சரித்திரம் ஆரம்பமாவதாகக் கொள்ளலாம்.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் யாழ்ப்பாண நகர் ஒருமைகாண தலைநகராக வளர ஆரம்பித்தது. 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் புதிய பாடசாலைகள், தேவாலயங்கள்,

உள்ளன. மக்களுக்குச் செய்வதை மட்டுமே ஒரே நோக்கமாகக் கொண்ட நல்ல உறுப்பினர் கோஷ்டியொன்று சபையில் இந்த வெள்ளிவிழா வருடத்தில் இருப்பதனால் நான் பெருமைப்படுகிறேன்.

எமது வரிகள் குறைந்தவையாக இருக்கின்றன. புதிய வரிகள் சில புகுத்தப்பட்ட போதிலும், பற்றாமையாகவுள்ளது. மேலதிகமாக வரி கேட்டாலும், அறிவுள்ள வரியிறுப்பாளர்கள் ஏற்கத் தயாராக உள்ளனர்.

வீதிகள், அரசாங்க இலாகாக்கள் முதலியனவும் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து நகரின் தோற்றம் மெதுவாக மாறுபடலாயிற்று. அந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இப்பொழுதைய யாழ். மத்திய கல்லூரி இருக்குமிடத்தில் அனாதைகள் இல்லமும் தேவாலயமும் இருந்தன. 1816-ல் இந்த சொத்தை மிஷனரிமார் வாங்கி ஆங்கிலபாடசாலையையும் மாதாகோயிலையும் கட்டினார்கள். இதுவே 1817-ல் யாழ்ப்பாணம் வெஸ்லியன் ஆங்கிலபாடசாலையாகத் திறக்கப்பட்டது. பின்னர் இது யாழ். மத்திய கல்லூரியாயிற்று. இதன் அருகில் 1923-ல் சென் பீட்டர் ஆலயம் கட்டினார்கள். இது போல் நகரின் பலபகுதிகளிலும் பாடசாலைகளும் தோன்றலாயின.

பிரிட்டிஷார் தமது ஆட்சியின் ஆரம்பத்திலேயே அரசு இலாகாக்களிடையில் வைத்துக்கொள்ள ஒரு முறையை அமைத்து தபால்நிலையம் ஒன்றைக் கட்டப்பட்டது. விரைவிலேயே கொழும்பு நகருடன் நெடுஞ்சாலை தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. மெயில்கோச் முறை செயல்படத் தொடங்கியது. அரசாங்க அதிபர்கள் நியமனம் இந்த நகரின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவலாயின.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் ஆஸ்பத்திரியொன்றும் இயங்க ஆரம்பித்தன. அதுவே இன்றைய பெரியாஸ்பத்திரியாக வளர்ந்தது. ஆரம்பத்தில் இது அரசினரால் நடத்தப்படவில்லை. உறுதிணைமாளர் சங்கத்தினரால் இது நடத்தப்பட்டது. 1906-ல் இதனை அரசு பொறுப்பேற்று 1907-ல் அரசாங்க சிவில் ஆஸ்பத்திரியாக மாற்றியது. நூற்றாண்டின் பிற்பகுதியில் நகரில் மக்கள் பெருக்கம் அதிகரித்து பலசுகாதாரப் பிரச்சினைகளையும் தோற்றுவித்தது. அப்பொழுது பரவிய நோய்களில் காலராவும் ஒன்று. 1867-ல் 10,064 பேர் வடக்கில் காலராவால் பாதிக்கப்பட்டு 6862 பேர் மரணமானார்கள்.

இதைத் தொடர்ந்து சுகாதார நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டு வடக்கில் தொற்றுநோய்கள் பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டன.

1872-ம் ஆண்டு காலத்தில் சோனகர்பகுதியில் முச்சந்தியிலிருந்து நாவாந்துறைக்கு சாந்தியார் மடத்திலிருந்து முச்சந்திக்கு இரு பாதைகள் அமைக்கப்பட்டன. [illegible] கென்வெளாடுக்கு முன்னிருந்த பட்டங்கட்டிகுளம், மற்றும் கழுதைறுத்தான் குளமும் தூர்க்கப்பட்டுவிட்டன. வில்லூன்றிப் பகுதியில் புதர்க்காடு வெட்டி துப்புரவாக்கப்பட்டது. பெரிய பள்ளிவாசலில் இருந்த மையவாடி மூடப்பட்டு வண்ணார்பண்ணையில் புதிய மையவாடி முஸ்லிம்களுக்கு திறக்கப்பட்டன. நகரின் பாதைகள் பலவும் விஸ்தரிக்கப்பட்டன. சில பொதுக்கிணறுகள் தூர்க்கப்பட்டு பொது மலகூடங்கள் நிறுவப்பட்டன.

1866-ல் நகரின் சனத்தொகை சமார் 20,000 பேர் என்று கணக்கிடப்பட்டது. 1871-ம் ஆண்டளவில் இது 75 சதவிகிதத்தால் அதிகரித்து 34684 பேராகக் கணக்கெடுக்கப்பட்டிருந்தது.

### ரயில்வே பகுதி

20-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் நகரின் சரித்திரத்தில் மிக முக்கிய ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. அதுவே ரயில் சேவை அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சியாகும்.

1902-ல் காங்கேசன்துறையிலிருந்து சாவகச்சேரிக்கு ஒருபாதை போடப்பட்டது. பின்னர் அது பளை வரைக்கும் விஸ்தரிக்கப்பட்டன. 1905 அனுராதபுரத்துடன் இணைக்கப்பட்டு இவ்வாறே கொழும்புடன் இணைக்கப்பட்டது. இந்தக்காலத்தில் ஏற்பட்ட இன்னொரு முக்கிய மாற்றம் முதலாவது உள்ளூராட்சிமன்றம் தோற்றுவிக்கப்பட்டதாகும். இதன் தலைவராக அரசாங்க அதிபர் இருந்தார். இதில் ஓர் உத்தியோகப்பூர்வமான உறுப்பினர்களும் மூன்று தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் இருந்தனர். இந்தச்சபை சொத்துவரி, மற்றும் விசேஷ வரிகள் அறவிடவும் அதிகாரம் உடையதாய் இருந்தது. பொதுச்சேவைகளை விஸ்தரிப்பதற்காக அரசாங்க மானியமும் வழங்கப்பட்டது.

இதற்கு விசேஷ கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்வதின் மூலம் யாழ்ப்பாணம் நாட்டின் பல பகுதிகளிலும் பிரபல்யமாகி இதில் முக்கியமாக வண்ணார்பண்ணையில் சேணியகுலத்தவர்களால் செய்யப்பட்ட துணிகள் சிங்களப் பெண்களின் 'கம்பாயம்' என்ற அரைச்சேலைகளாகப் பிரபல்யமாகின.

இதேசமயம் நகரின் வெளிச்ச வசதிலும் செய்யப்படலாயின. 1919-ல் தினமும் இரவு 10 மணிவரை 50 விளக்குகள் தெருவெளிச்சமாக எரிக்கப்பட்டன.

1931-ல் நகரம் மாவட்ட நகரசபையாக்கப்பட்டது. 1921-ல் மேமாதம் உள்ளூராட்சி மன்றத்தை மாநகரசபையாக்கும் யோசனை தெரிவிக்கப்பட்டது. 1940-ல் நகரசபையாக்கப்பட்டு 1949-ல் மாநகரசபையாக்கப்பட்டது.

கடந்த 25 ஆண்டுகளில் யாழ். நகர் பலபுதிய கட்டிடங்களைக் கண்டிருக்கின்றது. பொது நூலகம் தபால் நிலையம், ரயில்வே நிலையம் திறந்த வெளிஅரங்கு, வீரசிங்கம் மண்டபம், நவீன சந்தை. போன்றவை இவையாகும். நகரின் பல பகுதிகளிலும் புதிய நவீன வீடுகளும் தோன்றியுள்ளன. நகரின் அபிவிருத்திக்காக சபை பெருமுயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. நகரின் தோற்றம் மாறுவதற்கு இது பெரிதும் உதவுகின்றது.

## அரசாங்க அதிபர் வாழ்த்து



வீடமைப்புத் திட்டங்கள், வைத்திய சுகாதார சேவைகள், பூங்காக்கள், விளையாட்டு அரங்குகள், பொது நூலகம், திறந்தவெளி அரங்கு, நவீன சந்தை, ஸ்டேடியம் ஆகியன யாழ் மாநகரசபையின் 25 வருட கால சிறந்த சேவைச் சின்னங்களாகத் திகழ்கின்றன. மேயர் திரு. அல்பிரட் துரையப்பா இந்த நகரத்தின் முன்னேற்றுவதில் ஆரம்பகாலத்திலிருந்து இன்றுவரை அங்கத்தவராகவும், மேயராகவும் இருந்து பெரும்பங்காற்றியுள்ளார். [illegible]

## பிரதமர் வாழ்த்துகிறார்



யாழ். மாநகரசபையின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்துக்கு இந்தச் செய்தியை அனுப்பிவைப்பதில் மகிழ்ச்சியளிக்கிறது. ஒரு ஸ்தாபனத்தைப் பொறுத்தவரையில் இருபத்தைந்து வருடம் அதன் சரித்திரத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாகும். கடந்தகாலத்தை பிரதிபலிக்கச் செய்வதற்கு ஏற்ற ஒரு கொண்டாட்டமாகவும் இது அமைகிறது.

இது போன்ற கொண்டாட்டங்கள் கடந்த காலத்தை விமர்சிப்பதற்கு ஏற்ற கொண்டாட்டங்களாகும். கடந்த காலத்தில் விட்ட தவறுகளையும், குறைபாடுகளையும் கற்றுக்கொள்ளவும் உதவுகிறது.

எதிர்காலத்தை நல்ல யதார்த்த பூர்வமான முறையில் திட்டமிட்டுக்கொள்ளவும் வழி வகுக்கிறது.

சரித்திரப்பிரசித்திவாய்ந்த இந்த யாழ். மாநகரசபை வெள்ளி விழாவை நான் வாழ்த்துவதுடன், கடந்த காலத்தை விட இன்னும் உற்சாகத்துடன் யாழ்ப்பாண மக்களுக்கு சேவை செய்யும் என்றும் நம்புகிறேன்.

## ஜனாதிபதி வாழ்த்துகிறார்

25 வருடத்துக்கு முன்னர் யாழ். நகரம் மாநகரசபை என்ற அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டது. வடபகுதி பிரதான உள்ளூராட்சி மன்றமான இதன் திட்டம் உள்ளூராட்சி சேவையில் முக்கியத்துவம் வாய்ந்தது.

இச்சந்தர்ப்பத்தில் யாழ். நகர மக்களுக்கும், அவர்களின் பிரதிநிதிகளுக்கும் இந்த முக்கிய நிலையை அடைந்தமைக்குப் பாராட்டுக்களைத் தெரிவிக்கிறேன்.

யாழ்ப்பாணம் தனித்துவம் வாய்ந்த கலை, கலாசாரம், இலக்கியத்தைக் கொண்ட இடமாகும் இதுவே நாட்டின் சிறந்த நூல் நிலையம் ஒன்றை நிறுவுவதற்குக் காரணமாக இருந்தது

கடந்த 25 வருடகாலமாக சகல துறைகளிலும் நகரை அபிவிருத்தியடையச் செய்த நகரபிதாக்களை பாராட்டுவதுடன் வெள்ளிவிழா கொண்டாட்டம், தற்போதைய நீர் விநியோகம், வடிகால்திட்டம் ஆகியவற்றை ஒழுங்கி மேலும் நகரை முன்னேற்றும் என நம்புகின்றேன். வெள்ளி விழாவையொட்டி நகரபிதா உறுப்பினர், மற்றும் மக்களுக்கு என் வாழ்த்துக்களை அனுப்பிவைப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்தது

# இந். அரசியல் சட்டத்துக்கு விரோதமான செயலாம்

## ஜனசங்க ரிட்மனுவில் ஆட்சேபம்

சென்னை, ஜூலை. 12 கச்சதீவை இலங்கைக்கு விட்டுக்கொடுத்திருப்பது இந்திய அரசியல் சட்டத்துக்கு முரண்பாடான செயலென்று ஜனசங்கம் குற்றம்சாட்டியுள்ளது. கச்சதீவை இலங்கைக்கு தரும் வகையில் இரு அரசுகளும் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை ஆட்சேபித்து சென்னை ஹைகோர்ட்டில் ஜனசங்கம் தாக்கல் செய்துள்ள ரிட்மனுவிலேயே மேற்படி கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசை முதல் எதிர் மனுதாரராகவும் தமிழ்நாடு அரசை இரண்டாவது எதிர் மனுதாரராகவும் குறிப்பிட்டு தமிழ்நாடு ஜனசங்கக்கட்சியின் செயலாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி தாக்கல் செய்துள்ள ரிட்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆட்சேபக் கருத்தின் சுருக்கம் வருமாறு:

நாடாளுமன்றத்தின் அங்கீகாரமின்றியும், இந்திய அரசியல் சட்டத்தை முறையாகத் திருத்தாமலும் ஜூன் 28ல் ஏற்பட்ட இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தின்படி கச்சதீவை இலங்கைக்குத் தருவதற்குத் தக்க தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோருகிறேன்.

இந்தியப்பிரஜையாகிய நான், இந்தியப்பிரதேசமான கச்சதீவுக்கு எனது இஷ்டம் போலச் செல்லும் உரிமையை ஜூன் 28-ம் திகதி ஒப்பந்தம் தடுக்கிறது.

கச்சதீவு ராமநாதபுரம் ராஜாவின் ஜமீன்பகுதி என்பதையும் அத்தீவின் மீது இலங்கைக்கு எவ்வித உரிமையும் இல்லையென்பதையும் மத்திய அரசு எப்போதும் கூறிவந்துள்ளது. தமிழ்நாடு அரசும் அடிக்கடி வலியுறுத்தியுள்ளது.

தானே முன்பு கூறியுள்ள தற்கு மாறாகவும், இந்தியப் பிரஜைகளை மெத்தனமாக்கிய பின்பும், முதல் எதிர் மனுதாரான மத்திய அரசு ஸ்ரீலங்காவுடன் மேற்குறித்த ஒப்பந்தத்தை செய்துகொண்டுள்ளது. அரசியல் சட்டத்திற்கு முறையான திருத்தம் செய்தாலன்றி அல்லது அரசியல் சட்டத்தின் 3-வது ஷரத்தின்படி இந்திய நாடாளுமன்றம் சட்டமியற்றியலன்றி மேற்குறித்த ஒப்பந்தம் செல்லாது; ஜனநாயகமுறையின்படியான சம்பிரதாயங்களுக்கும் விரோதமாகும்.

1. அரசியல் சட்டத்தைத் திருத்தாமல் இந்தியபிரதேச மெதனையும் பிறநாட்டுக்குத் தரலாகாது.

2. மேற்படி திகவ விட்டுத் தருவது தமிழ்நாட்டின் பரப்பைக் குறைக்கும்.

3. அரசியல் சட்டத்தின் 3-வது ஷரத்திலுள்ள நிபந்தனை எதுவும் நிறைவேற்றப் படவில்லை.

எனவே அரசியல் சட்டம் தந்துள்ள அதிகாரத்தை மீறி மத்திய அரசு மேற்படி ஒப்பந்தத்தைச் செய்துள்ளது.

அந்த ஒப்பந்தம் செல்லாது என்று அறிவிக்கவும், அதன் அமுலுக்குத் தடைவிதிக்கவும் கோருகிறேன்.

### கிளர்ச்சி நடத்துவர்

கச்சதீவை இலங்கைக்கு தருவதை ஆட்சேபித்து தமிழ்நாடு பார்வர்டுபிளாக் கிளர்ச்சி நடத்தும் என்றும் அக்கிளர்ச்சி பற்றி அஃஹாக்கமிட்டி விரைவில் கூடி முடிவு செய்யும் என்றும் தமிழ்நாடு பார்வர்ட் பிளாக் ஆயத்தக்கமிட்டி கூடி முடிவு செய்துள்ளது.

### உழைப்பாளர் நல கட்சி அறிக்கை

கச்சதீவை இலங்கைக்கு தரும் ஒப்பந்தத்தைக் கண்டித்து தமிழ்நாடு உழைப்பாளர் நலகட்சி உபதலைவர் திரு டி. எம். பீ. ராஜமாணிக்கம் அறிக்கை விடுத்துள்ளார்.

அத்தீவை மீட்கக்கிளர்ச்சி நடத்தினால் தமது கட்சியினர் அக்கிளர்ச்சியின் முன்னணியில் இருப்பர் என்றும், அந்த ஒப்பந்தத்தைக்கண்டித்து த. நா அசெம்பிளி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றவேண்டுமென்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உழைப்பாளர் நலக்கட்சி திருவண்ணாமலையில் கூடி, கச்சதீவிலுள்ள அர்ச் அந்தோனியார் கோவில் வன்னியர் சமூகத்தினரால் கட்டப்பட்டது என்றும், எனவே கச்சதீவில் வன்னியர் சமூகத்துக்கு உரிமை உண்டென்றும், வன்னியர் நலன்களைக் காக்க இலங்கைக்கு கச்சதீவுகைத் தரும் ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யுமாறு மத்திய அரசை வலியுறுத்திக் கோருவதாகவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

# போர்த்துக்கல் மந்திரிசபை முற்றாகக் கலைக்கப்பட்டது

லிஸ்பன், ஜூலை. 12 போர்த்துக்கல் ராணுவ ஆட்சித் தலைவர் ஜெனரல் ஸ்பினோலா தமது மந்திரி சபையை முற்றாகக் கலைத்து விட்டார்.

பிரதம மந்திரி திரு. கார்லோஸ் தமது சக மந்திரிகளுடன் ஏற்கனவே பதவியிலிருந்து விலகிக் கொண்டது தெரிந்ததே. போர்த்துக்கலில் ராணுவப் புரட்சி ஏற்பட்டபின்னர் ராணுவ அதிகாரப் பீடத்தினால் திரு. கார்லோஸ் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

இவர் சில கோரிக்கைகளை முன்வைத்து தமது பதவியை ராஜினாமா செய்தார். புதிய ஜனாதிபதி ஒருவர் மக்களால் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பது இவர் முன்வைத்த முக்கிய கோரிக்கைகளின் ஒன்றாகும். மந்திரிசபை நியமனங்களில் ராணுவத்தின் தலையீடு இருக்கலாகாது என்றும் இவர் கோரி இருந்தார். இவரது கோரிக்கைகளை ஜெனரல் ஸ்பினோலா ஏற்றுக்கொண்டபோதிலும் பிரதம மந்திரி தமது ராஜினாமாவை விலக்கிக்கொள்ள வில்லை.

இப்பொழுது மந்திரிசபையையுமே ஜெனரல் ஸ்பினோலா கலைத்துவிட்டார். புதிய மந்திரிசபையொன்று நியமிக்கப்படும் என்று அவர் அறிவித்துள்ளார். பிரதம மந்திரி பதவிக்கு ஒருவரை தாம் தெரிவு செய்திருப்பதாகவும் ஆனால் அவர் பெயரை இப்போதைக்கு வெளியிட முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அனேகமாக கலைக்கப்பட்ட மந்திரிசபையில் பாதுகாப்பு அமைச்சராகவிருந்தவர் புதிய பிரதம மந்திரியாகப் பதவியேற்க கூடும் என்று கருதப்படுகின்றது.

# ஆலயத்தில் உயிர்ப் பலிக்கு சனசமூகநிலையம் ஆட்சேபம்

## காலவரையின்றி மூடப்பட்டது

வண்ணார்பண்ணை, வெள்ளி கோவிலில் உயிர்ப்பலிஈடுப்பதை ஆட்சேபித்த கட்டுவன் பாரதி சனசமூகநிலையம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

கட்டுவன் தெற்கு முனியப்பர் ஆலயத்தில் ஆடு, கோழி போன்ற பிராணிகளை உயிர்ப் பலியிடுவதை நிறுத்துமாறு இச்சங்கத்தின் நிர்வாகிகள் ஆலய நிர்வாகிகளைக் கடந்த சிலவருடமாகக் கேட்டுவந்தனர்.

இதவிடயமாகக் கடந்தவருடம் பேச்சுவார்த்தை ஒன்றும் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையை மீறி இவ்வருடம் மேற்படி ஆலயத்தில் உயிர்ப்பலி இட்டதை இச்சனசமூகநிலையத்தினர் ஆட்சேபித்து ஆடா-வான சத்தியாக்கிரகம் செய்ததுடன் இதுசம்பந்தமாக ஒரு முடிவு கிடைக்கும்வரை தமது ச.ச. நிலையத்தையும் மூடியுள்ளனர்.

இதுசம்பந்தமாக கிராமசபைத் தலைவருடனும், காரியாதிகாரியுடனும், பொலிஸ் அதிபருடனும், உள்ளூராட்சி உதவி ஆணையாளருடனும், அரசாங்க அதிபருடனும் மேற்படி சனசமூக நிர்வாகிகள் தொடர்பு கொண்டுள்ளனர்.

# ‘கஷ்டம் வரும்போது மட்டும் கடவுளை நினைக்கக்கூடாது?’

மாவிட்டபுரம், வெள்ளி "நிலையற்றதாகிய இவ்வுலகில் வாழும் நாம் நிலையற்ற பொருள்களில் நாட்டம் கொள்ளக்கூடாது. இம்மைக்கும், மறுமைக்கும் நிலையான நன்மை பயக்கும் இறை அருளில் நாட்டம் கொள்ளவேண்டும். இதற்கு கந்தபுராணம் போன்ற புராணங்கள் எமக்கு வழிகாட்டிகளாய் அமைகின்றன'

இவ்வாறு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தையொட்டி நடைபெறும் கந்தபுராணத் தொடர் விரிவுரையைத் தொடக்கிவைத்து முதலாவது விரிவுரையை ஆற்றுகையில் இவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி கூறினர்.

ஆலய ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இச்சொற்பொழிவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

‘கந்தபுராணத்தை ஓதவதாலோ, ஓதக்கேட்பதாலோ நாம் எமது கஷ்டங்களை மறந்து இறைவனுடன் சங்கமித்து இறை அருளைப்பெற முடியும். புராணங்களை ஓதக் கேட்பதால் ஆத்மலாபம் கிடைக்கும். மார்க்கண்டேயரும் சூரனும் புராணங்களை ஓதி ஆன்மலாபம் பெற்றனர்.

"ஒருநாட்டின் சிறப்பு அங்குள்ள ஆலயங்களிலேயே தங்கியுள்ளது. ஆலயங்கள் சிறப்புற சைவமக்களின் ஒத்துழைப்பும் பக்தியுடன் கூடிய வழிபாடும் அவசியமானது. துன்பம் வரும்போது மட்டும் இறைவனை நாடும் நிலைமாற வேண்டும். இறைவனை வணங்குவதற்காக தினமும் சொற்ப நேரத்தையாவது ஒதுக்க வேண்டும்."

சமய பெரியார் திரு. ஆ. திருஞானசம்பந்தர் பேசுகையில், மாவை ஆலயத்தில் ஒருமுறை நாவலர் பெருமானே கந்தபுராணம் படிக்கத்தவரென்றும், அவர் பணி இன்று நன்கு தொடரப்பட்டு வருகிறதென்றும் கூறினர்.

பௌராணிகர் வ. கைசர்மாவும் உரையாற்றினர். (அ)

# தினப் பலன்

ஆனிமாதம் 29-ந் திகதி (13- 7- 74)

மேஷம்- அசுர வேகத்தில் செயலாற்றவேண்டும் என்று விரும்புவீர்கள். ஆனால் சகபயணங்கள் ஆமைவேகத்தில் நகரும்.

ரிஷபம்- சொற்சிலம்பம் ஆடுவதன் மூலம் மற்றவர்களைச் சோர்கவைப்பீர். சிலர் தேர்தல் விவகாரங்களிலும் ஈடுபடலாம்.

மிதுனம்- இதயத்தில் எரிமலை குமுறும். உள்வீட்டிலேயே உபத்திரவங்கள் அதிகரிக்கும். குழந்தை யொன்றின் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

கடகம்- தொழில் புரியுமிடத்தில் தொல்லைகள் தோன்றக்கூடும். இதன்மூலம் பொருள் விரயத்திற்கும் இடமுண்டு.

சிம்மம்- இதயக் கமலம் இன்பத்தால் மலரும். இல்லறத்தின் பிணைப்புகள் இறுகும் கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும்.

கன்னி- திகைக்கவைக்கும் சம்பவம் இன்று நடைபெறலாம். அரசினன் ஆத்திரப் பார்வையும் உங்கள் பக்கம் திரும்பமுடியும்.

துலாம்- நீண்டநாள் எதிர்பார்த்த நல்லதிருப்பம் இன்று ஏற்படமுடியும். காதல் உலகில் களிவான சம்பவங்கள் இடம்பெறும்.

விருச்சிகம்- செய்தொழிலில் தளர்ச்சிஏற்படும். பிரயாணத்தைத் தவிர்க்கவும். இறை நம்பிக்கை நன்று

தனுசு- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம் கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. வாகன நலனுக்கும் இன்று இடமுண்டு.

[illegible] புதிய பாதைதிறக்கும். வேலையிடத் தொடர்புகளில் நல்ல திருப்பம் ஏற்படும்.

கும்பம்- மதிப்பு உயரும் பொதுமக்கள் ஆதரவுகிடைக்கும். புத்திரரால் புகழுமுண்டு. புதினமும் கேட்பீர்.

மீனம் - துன்பத்தின் ரேகைகள் நிழலாட்டம் போடும். துணைவரின் உடல் நலன் கெடும். பணமும் பெருமளவில் செலவாகும்.

சோதிடக்கலாநிதி
திருமதி க. வேலுப்பிள்ளை

# ‘யாழ். நீர்வளமும் எமது கடமையும்’

யாழ்ப்பாணம், சனி "யாழ்ப்பாண நீர்வளமும் எமது கடமையும்" எனும் தலைப்பில் யாழ். இயற்கைவள அபிவிருத்தி இயக்கம் இம்மாதம் 20-ந் திகதி யாழ். மத்திய கல்லூரியில் கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளது. (த-அ)

### விரைவில் வரும்

முல்லைத்தீவு, வெள்ளி முல்லைத்தீவின் முக்கிய தேவையான விளையாட்டு மைதானம் விரைவில் கிடைக்கவிருக்கின்றது. இதற்கான ஆயத்தங்களை பட்டண சபைத்தலைவர் திரு மகுவஸ்தியாம்பிள்ளை செய்து வருகின்றார். (அ)


அபிஷேகத் திரவியங்கள்

சந்தனக்குழம்பு

(மைசூர், அவுஸ்திரேலியா, சந்தனக்கட்டைகளால் தயாரிக்கப்பட்டவை)

0 பழனி வாசனை விபூதி
0 அபிஷேக சாமான்கள்
0 பஞ்சாமிர்த சாமான்கள்
0 நைவேத்திய சாமான்கள்
0 அஷ்டபந்தன மருந்து
0 அத்திபாரமிடும் பொருட்கள்
0 விவாக முகூர்த்த பொருட்கள்

வாசனை மிகுந்த தெய்வீக மணம் கமழும்

0 "ராதா" பத்மினி ஜவ்வாது பத்தி
0 99 — 999 ஜவ்வாது பத்தி
0 இந்திராணி பத்தி
0 சக்தி, பூஜா அகர் பத்திகள்
0 மட்டிப்பால் பத்திகள்

விளைவு சூடம், சாம்பிராணி
கோவில் தேவைகளுக்கான

சகலவிதமான சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

மற்றும் மருந்துகள், மருந்துச்சரக்குகள்
ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தாரின்
தயாரிப்புகள் மலிவாகக் கிடைக்கும்

எஸ். சுப்பிரமணியம்
அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்குகள் கோவில் அபிஷேகத்திரவிய வியாபாரம்)

53, கே.கே.எஸ்,ரோட், யாழ்ப்பாணம். போன்: 541, வீடு: 7063

160, செட்டியார் தெரு, கொழும்பு-11. போன்: [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோஹரா (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் கே.ஆர்.விஜயா சுந்தரராஜன் மனோகர்

மகத்தான 3-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்

# வாயாடி

றியோ (யாழ். நகர மண்டபம்)
தினசரி 10-30, 2-00, 4-45, 7-15, 9-45




ஆபிரிக்காவின்
இரகசியக்
காடுகள்
(சினிமாஸ்கோப் கலர்)
இதுவரை வெளி வராத அதி உன்னத வன வாழ்க்கைச் சித்திரம்.
50-க்கு மேற்பட்ட மாணவர் குழுவிற்கு தலா ரூபா 1/-


# இன்றைய கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், சனி
யாழ்ப்பாணம் மாநகரசபை பொன்விழா இன்றைய கலை நிகழ்ச்சிகள்:

மாலை 6.30 7.30 நாதஸ்வரக்கச்சேரி - நாதஸ்வரவித்துவான் என். ஆர். கோவிந்தசாமி குழுவினர், இணுவில். 7.30—7.40 காப்புறுதி வரவேற்பு பாட்டு - சென்ற் சாள்ஸ் கல்லூரி மாணவர். 7.45—8.45 வில்லுப்பாட்டு காப்புறுதி-கலைவாணர் வில்லிசைக்குழு என். கணபதிப்பிள்ளை (சின்னமணி) அச்சுவேலி. 8.15—9.00 பரதநாட்டியம்-திருமதி விமலா யோகநாதனின் மாணவிகள். 9.00 மணி நாடகம் (1) நல்லகுடு-இளங்கேஸ்வரி இளைஞர் நாடகமன்றம் (இளவாலை). பாமா விஜயம் - கலைமகள் நாடகசபா-அரியாலை.

## நாளை

மாலை 6.30—7.30 நாதஸ்வரக்கச்சேரி- தவில் வித்துவான் என். ஆர். சின்னராசா குழுவினர்-இணுவில். 7.30—8.15 பரத நாட்டியம் திருமதி லீலா ஆறுமுகையாவின் மாணவி செல்வி தனினி அரசரத்தினம். 8.15—9.00 யாழ். ரோட்டறிச் சங்கம் நடத்தும் பேச்சுப்போட்டியில் பரிசு பெற்ற இருவரின் பேச்சு. 9.00—10.00 பொப் இசை. மெல்லிசை கலாலயா இசைக்குழுவினர் - நாச்சிமார் கோவிலடி. 10.00 நாட்டுக் கூத்து -'சங்கிலியன்' (யாழ். நவரச நாட்டுக்கூத்து கலா மன்றம் சுண்டிக்குளி. (ஈ-அ)

# எழுத்துவினைஞர் சங்ககூட்டம்
## நிராகரிக்கப்பட்ட தீர்மானங்கள்
# மீண்டும் நிறைவேறின

யாழ்ப்பாணம், சனி
அரசாங்க எழுது வினைஞர் சங்க யாழ். கிளைச் செயற்குழுவால் நிறைவேற்றப்பட்டுத் தாய்ச் சங்க தலைவரால் நிராகரிக்கப்பட்டதாக கூறப்படும் ஏழு தீர்மானங்களும் நேற்று மாலை நடைபெற்ற சங்கப் பொதுச்சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தை வருகிற மூதலர்த் திகதி மன்னாரில் நடைபெறவிருக்கும் தாய்ச் சங்க ஆண்டுக்கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு தீர்மானம் கேட்டுக் கொண்டுள்ளது.

முன்னெப்பொழுதும் இல்லாதவாறு இவ்வாண்டு நிர்வாகசபைத் தெரிவில் நூற்றுக்கணக்கான அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர். பெண் உறுப்பினர்கள் பலர் இதில் பங்குகொண்டனர்.

கடந்த வருட நிர்வாக சபையினர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. அ. புவனேசன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. (ஈ)

## சுவீப் முடிவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 06 C 0275 | 08 C 0867 |
| 14 C 0169 | 15 C 0585 |
| 19 C 0116 | 19 C 0408 |
| 02 D 0470 | 06 D 0640 |
| 06 D 0685 | 22 D 0002 |
| 22 D 0472 | 22 D 0678 |
| 05 E 0078 | 23 E 0139 |
| 25 E 0247 | 01 F 306 |
| 01 F 0899 | 11 F 0909 |
| 02 G 0117 | 06 G 0299 |
| 08 G 0893 | 09 G 0871 |
| 15 G 0199 | 16 G 0484 |
| 19 G 0623 | 04 H 0208 |
| 09 H 0878 | 16 H 0577 |
| 20 H 0393 | 25 H 0253 |
| 06 J 0127 | 06 J 0860 |
| 06 J 0923 | 09 J 0824 |
| 12 J 0908 | 24 J 0942 |
| 04 K 0978 | 05 K 0317 |
| 08 K 0533 | 11 K 0886 |
| 13 K 0335 | 15 K 0076 |
| 19 K 0700 | 21 K 0216 |
| 25 K 0453 | 08 L 0906 |
| 11 L 0210 | 13 L 0141 |
| 13 L 0216 | 22 L 0828 |
| 20 M 0795 | |
| 21 M 0090 | 14 N 0834 |
| 10 N 0582 | 19 N 0627 |
| 24 N 0576 | 24 N 0913 |
| 05 O 0977 | 24 O 0036 |
| 19 P 0600 | 03 Q 0854 |
| 15 Q 0445 | 16 Q 0743 |
| 16 Q 0907 | 20 Q 0165 |
| 03 R 0728 | 11 R 0667 |
| 12 R 0401 | 02 S 0352 |
| 03 S 0549 | 06 S 0099 |
| 12 S 0064 | 14 S 0921 |
| 05 T 0392 | 17 T 0620 |
| 02 U 0421 | 05 U 0101 |
| 08 U 0580 | 14 [illegible] 0537 |
| 24 U 0456 | 07 V 0503 |
| 10 V 0744 | 25 V 0447 |
| 04 W 0230 | 10 W 0276 |
| 22 W 0802 | 26 W 0304 |
| 17 X 0104 | 07 X 0925 |
| 30 Y 0606 | 25 Y 0726 |
| 15 Z 0900 | |

இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும். (ஈ)

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. கே. ஞானச்சந்திரன் சாட்சியங்களைப் பதிவுசெய்து கொண்டு சடலம் அடையாளம் காணப்படுவதற்காக யாழ்ப்பாண ஆஸ்பத்திரிச் சவச்சாலைக்கு அதை அனுப்பி வைக்கும்படி உத்தரவிட்டார். மரணமான இப்பிராணியின் வயிற்றின் வலது பக்கத்தில் ஐந்தரை அங்குல அளவில் சத்திரசிகிச்சை செய்யப்பட்ட அடையாளம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (மட். நி


யாழ் - ராணி சினிமாவில்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—ஜெயலலிதா
முத்துராமன்—நம்பியார்
நடித்த

# ஒரு தாய் மக்கள்

நாகம்ஸ் [சுன்னாகம்]
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி - சாவித்திரி
படித்தால் மட்டும் போதுமா

வெலிஸ் [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
சந்திரோதயம்

சாந்தி (சங்கானை,
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி — ஜமுனா
தங்கமலை ரகசியம்
ச. 4-15 ஞா. 10-30
CARRY ON ROUND THE BEND

REGAL Jaffna
Daily 4-45, 7, 9-30 p.m.
Antony Quinn,
Inger Steven
in
A DREAM OF KINGS
(color)

5-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா - (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9.45
ஃ இதுவரை எந்தப் படத்துக்குமில்லாத பெண்கள் கூட்டம்.
சிவாஜி, உஷாநந்தினி, முத்துராமன், ஏ. சகுந்தலா, சோ, மனோரமா,

# 'பொன்னூஞ்சல்'

உங்கள் உள்ளங்களை மகிழ்விக்க
விஜயம் செய்துள்ளாள்!
யாழ் - வின்ஸர் வெண்திரையில்
அசோக் பிக்சர்ஸ் அளிக்கும்

# வந்தாளே மகராசி

தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர் ★ டி. கே. பகவதி
★ வி. எஸ். ராகவன் ★ சோ
★ ஜெயலலிதா (இரு வேடங்களில்) ★ புஷ்பலதா
★ எம். என். ராஜம்
நடித்தது
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்:
இயக்குநர் திலகம் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
பாடல்கள்: வாலி

ஸ்ரீதர் சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
THE CAT 'O' NINE TAILS
வெகு விரைவில் MAGNUMFORCE (Cinemascope)

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, சனி, ஞாயிறு காலை 10-30

இது ஒரு வழக்கமான கதை அல்ல.
முற்றிலும் மாறுபட்ட கதை.
எளிதில் கிடைக்காத தான் அடையவேண்டிய
அன்புச் செல்வத்தை தேடிப் புறப்படும்
ஒரு கோடீஸ்வரனின் கதை
...
...

# ராமன் தேடிய சீதை

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார் • அசோகன் • நாகேஷ் • மனோரமா
டைரக்ஷன்: ப. நீலகண்டன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

லிடோ [யாழ்ப்பாணம்]
ஷர்மிலா தாகூர், ராஜேந்திரகுமார் நடித்த
தினசரி 4 காட்சிகள்

# தலாஷ் (TALASH)

(ஈஸ்ட்மன் வர்ண ஹிந்தி சித்திரம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

ஞானம் ஒற்றுமைக்கு இட்டுச் செல்கிறது. அஞ்ஞானம் பல்வேறுபட்ட நிலைக்கு வழி செய்கிறது.
—ஸ்ரீராமகிருஷ்ணர்.

# ஈழநாடு

EELA NADU

13-7-74

மாநகரசபை வெள்ளிவிழா கண்காட்சியில்

# வடக்கில் உற்பத்தியான பேரீச்சம்பழமும் 100 ருத். நிறையுள்ள பூசனிக்காய்!

## ஆயிரம் காய்களைக்கொண்ட வாழைக்குலை 50 ருத்தல் நிறையுள்ள மரவள்ளி!!

[எஸ். எஸ். செல்வநாயகம்]

யாழ். மாநகரசபை வெள்ளி விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக யாழ். பொதுசன நூல் நிலைய வளவில் கைத்தொழில், விவசாய பொருட்காட்சி ஒன்று இடம்பெற்று வருகின்றது.

யாழ். மாவட்ட விவசாயப் பகுதியினரின் பகுதியில் உணவுப்பொருட்களை பழுதடையாவண்ணம் சேகரிக்கும் வழிமுறைகள், தானியங்களில் இருந்து பெறக்கூடிய உணவுவகை ஆகியவை பற்றிய மாதிரிப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

புதிய தானிய இனங்களின் மாதிரிச்செய்கை முறைகளும் இடம் பெற்றன. பாத்திகளில் சோளம், லங்காபருப்பு, 45 நாட்களில் பயன் தரும் புசிற்று அவரை இனம், சோளம், இறுங்கு, குறுகிய காலப் பயறு ஆகியனவும் காட்சிக்கென செய்கைபண்ணப்பட்டுள்ளன.

கூட்டெரு தயாரிப்புபற்றி குழிகள் அமைக்கப்பட்டிருந்ததுடன் தேனீ வளர்ப்புமுறை பற்றிய காட்சிப் பொருட்களும் இடம்பெற்றிருக்கின்றன.

அரிசிக்குப் பதிலாக பாவிக்கக் கூடிய பதிலுணவுகளும் காட்சிப்பொருளாக இடம் பெற்றுள்ளன.

சோளம், இறுங்கு, சோயா, மரவள்ளி, லங்காபருப்பு ஆகியவற்றிலிருந்து வடை, தோசை, இடியப்பம், பிட்டு ஆகிய உணவு வகைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

நெல் வயல்களில் காணப்படும் களை வகைகளும், தரை ஒன்றில் ஒரே பயிரையே செய்கை பண்ணுவதன் மூலம் ஏற்படும் நோய்களைத் தடுத்து சிறந்த முறையில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் வகையில் சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை மாதிரி ஒன்றும் காணப்படுகிறது.

உணவுப் பொருட்களிலிருந்து தயாரிக்கக்கூடிய சமையல் பாகங்கள் பற்றி வரைப் படங்கள் மூலம் சித்தரித்துக் காட்டப்பட்டிருந்தன.

விவசாய இலாகாவினால் வெள்ளிவிழாவிற்காக நடத்தப்பட்ட உணவுப் பயிர்ச் செய்கைப் போட்டி, உணவுத் தயாரிப்புப் போட்டிகளில் இடம்பெற்ற பயிர்களும், உணவுகளும் காட்சியில் காணப்படுகின்றன.

விவசாய இலாகாவினால் வெள்ளிவிழாவிற்காக நடத்தப்பட்ட உணவுப் பயிர்ச் செய்கைப் போட்டி, உணவுத் தயாரிப்புப் போட்டிகளில் இடம்பெற்ற பயிர்களும், உணவுகளும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

விவசாயப் போட்டியில் இடம்பெற்ற 1080 காய்களுக்கு மேல் காணப்பட்ட வாழைக்குலைகள், சுமார் 100 இருத்தல் நிறையுடைய பூசனிக்காய், சுமார் 50 இருத்தல் நிறையுள்ள மரவள்ளி, பம்பாய் வெங்காயம் போன்ற பெருத்த தோற்றமுடைய சிறு வெங்காயங்களும் காட்சிப்பொருளாயுள்ளன.

விவசாய ஆர்வமுடைய தெல்லிப்பழை வாசி ஒருவரால் பரீட்சார்த்தமாக செய்கை பண்ணப்பட்ட பேரீச்சம்பழமும், மாஇலுப்பள்ளம் விவசாயயந்திரபகுதியினரால் உற்பத்தி செய்யப்பட்ட விவசாய உபகரணங்களும் காட்சிப்பொருளாயுள்ளன.

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கண்காட்சிப் பகுதியில் அச்சுவேலிக் கைத்தொழிற் பேட்டையின் மாதிரி ஒன்று காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருந்தது. கொத்மலேயில் உள்ள வைக்கோலில் இருந்து கடதாசி அட்டை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையின் புகைப்படப் பிரதிகளும், தலகொலையிலுள்ள யந்திர உற்பத்திச் சாலையின் புகைப்படப்பிரதிகளும் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

சீனிப்பகுதித் தொழிற்சாலை பற்றிய புகைப்படப் பிரதிகளும், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திக் கம்பனியினரால் இருசக்கர உழவு யந்திர இழுவை வண்டிகள் உற்பத்திபற்றிய புகைப்படப் பிரதிகள் காட்சிக்கென ஒழுங்காகக் காணப்பட்டன.

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தமிழ், ஆங்கில வெளியீடுகளும் இடம் பெற்றுள்ளன.

விசுவமடு படித்த வாலிபர் திட்ட, மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டக் காட்சிப்பகுதியில் விசுவமடுக்குள மாதிரி அமைப்பொன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தின் ஆடைவகைகள், மரக்கறி வகைகள், பனங்கட்டி முதலியன காட்சிப் பொருளாக இடம்பெற்றுள்ளன.

விசுவமடு படித்த வாலிபர் திட்டத்தினர் பயிர்வகைகளைக் காட்சிப் பொருளாக வைத்திருந்தனர்.

யாழ். மாவட்ட பிரதேச அபிவிருத்தி திட்டசபையினர் சுமார் 39 அபிவிருத்தித் திட்டங்களைக் காட்சியில் இடம்பெற வைத்துள்ளனர்.

யாழ் மாநகரசபையினரின் காட்சிப்பகுதியில் சௌக்கிய, சுகாதார புகைப்படங்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

கண்காட்சி பொதுவாக களியாட்ட விழாவாக அமையாமல் பயன்தரும் விடயங்களைப் போதிப்பதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## அரிசி விலை

அரிசி விலை குறைந்தால் ஐந்தும் குறையும் என்பார்கள். இந்த உண்மையின் மறுபுறத்தை நாட்டுமக்கள் கண்முன்னே காணமுடிகிறது. எனவே என்னதான் சொன்னாலும், வருகிற திங்கட்கிழமை தொடக்கம் பங்கீட்டரிசி கொத்துக்கு இருபது சதம் அதிகரிக்குமென்ற செய்தி மக்களுக்கு எவ்வித மகிழ்ச்சியுமளிக்கமாட்டாது.

தவிர்க்கமுடியாத நிலையில் அரசாங்கம் அரிசி விலையை அதிகரிக்கின்றதென்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை. விலை அதிகரிப்பை ஆட்சேபிப்பது வேறு; மக்களின் இன்னல்களுக்கு அனுதாபம் காட்டுவது வேறு.

இலவச அரிசியை அதிகரிப்பதில் நாம் என்றுமே திருப்திகொள்ளவில்லை. ஒன்றுக்குமே வழியில்லாத ஏழை மக்களுக்கு உதவக்கூடிய தற்காலிக சலுகை என்றுமே தொடர்ந்திருப்பது நாட்டின் பொருளாதாரத்துக்கு மட்டுமல்ல சுதந்திரவாழ்வை விரும்பும் பொதுமக்களின் சுயமரியாதைக்கும் அது இழுக்காகும். எனவே இலவச அரிசி அரைக் கொத்துக்கு இறங்கிவிட்டதால் அதிக ஆபத்து இல்லை; ஆனால் இந்த அரைப்படி இலவச அரிசியைக் கொண்டு பங்கீட்டரிசியின் விலையைக் காலத்துக்குக்காலம் அதிகரித்துவருவதால் மக்களின் பட்டினிநிலை மோசமடையுமென நாம் அஞ்சவேண்டியிருக்கிறது.

பெற்றோல் விலை கூடுவதால் விலைவாசி எதுவும் கூடுமேயானாலும் அரிசி விலையின் தாக்கத்துக்கு அது நிகராகாது. உணவில் தன்னிறைவுகாணும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கும் அரசாங்கம் அதற்குக் கையாளும் தீவிரநடவடிக்கைகள் அல்லற்படும் ஏழை மக்களின் அரிசியைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

கொத்துக்கு இருபது சதமென்றால் விலைவாசி ஏற்றம் என்னகோலம் கொள்ளுமென்பதைப் பொருளாதார நிபுணர்களே படம்பிடிக்கமுடியுமோ என்பது சந்தேகம். பொருளாதாரப் புள்ளி விபரங்கள் மக்களின் அசாதாரண கஷ்டநிலைக்கு ஈடுகொடுக்கமாட்டா.

நெல்லின் உத்தரவாத விலையை 30 ரூபாவிலிருந்து 33 ரூபாவாக உயர்த்தியது வரவேற்கத்தக்கது. ஏற்கனவே உத்தரவாத விலையை 35 ரூபாவாக உயர்த்தவேண்டுமென்று நாம் எழுதிவந்தோம். நாட்டின் நிதிநிலை இடம் கொடுக்கமுடியாதபோதும் நெற்சந்தைப்படுத்தும் சபைக்கு விவசாயிகளையும் உற்பத்தியாளர்களையும் வசீகரிக்க இது ஒரு சிறந்த வழியாகும்.

உத்தரவாத விலையை ஒரு கையால் உயர்த்திவிட்டு உரத்துக்கு வழங்கும் மானியத்தை மறுகையால் நிறுத்திவிடுவது அரசாங்கம் தான் தப்ப எடுக்கும் தந்திரம்போல் தோன்றுகிறது. தன் கையால் வழங்கும் மானியத்தை நிறுத்திவிட்டு, உத்தரவாத விலைக்குத் தேவைப்படும் மேலதிக தொகையைப் பங்கீட்டரிசியில் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு அரசு நிலைமையை சமாளிக்க முயல்கின்றதுபோலும்.

பொருளாதார நிபுணத்துவம் மட்டும் நாட்டின் நெருக்கடிக்கு ஒரு சஞ்சீவியாக அமையாது. மனிதாபிமானத்துக்குரிய அரிசி விலை, அரசியலுக்கு அப்பாலே வைத்துக் கணிக்கப்படவேண்டிய விஷயம்.

பங்கீட்டரிசியை அதிகரிக்கவும், விலையை மட்டுப்படுத்தவும் முடியுமானால், இலவச அரிசி இல்லாமற்போன வழியிலாகும்.

## தவறவிட்ட ரொக்கத்தை பெற்றார்!

யாழ்ப்பாணம், சனி

பணத்தைத் தவறவிட்டுப் பரிதவித்தவரிடம் இ. போ. ச. உத்தியோகத்தர் பணத்தை ஒப்படைத்தார். சுதுமலையைச் சேர்ந்த எஸ். தியாகராஜா 1440 ரூபாய் ரொக்கப்பணத்தை பஸ்ஸில் தவறவிட்டார். யாழ்ப்பாணம் டிப்போவைச் சேர்ந்த எஸ். இராசநாயகம் [illegible]

## ஜயாறன் எழுதுவது

கோண்டாவிலிலுள்ள பஸ் தலைமைக் காரியாலயத்துக்கு ஓர் அன்பருடன் சென்றிருந்தேன். அங்கு அதிபரின் அறை பிலே-சுவரிலே, இங்கு மார்ச் மாத பஸ் போக்குவரத்தின் வரவு-செலவு முதலிய புள்ளி விபரங்களைத் தெளிவாகத் தந்திருந்தார்கள். அதைப்படிக்க மிக மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது. மார்ச் மாதத்தில் எச்செலவும்போக இரண்டரை லட்சரூபா இ. போ. ச. வுக்கு இலாபம் கிடைத்துள்ளது. இதைத் தொடர்ந்து இரண்டுமாதங்களுக்கும் இதேலாபம் சராசரி கிடைத்துள்ளதாக அங்குள்ள தலைமை அதிகாரிமூலம் அறிந்தேன்.

சென்னையைப்போல், இங்கும் பஸ் டிரைவர், கண்டக்டர்களுக்கு, ஒரு குறிப்பிட்ட தொகைக்குமேல் வசூலாகும் பணத்துக்கு 10க்கு ஒன்று வீதம் கமிஷன் கொடுப்பதாகவும், இந்த முறை நல்லபலன் அளித்து வருமானம் அதிகரித்திருப்பதாகவும் தெரிந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து இவ்வளவு அதிக வருமானம் கிடைக்கையில், பிரயாணிகளுக்கு போதிய வசதிகளையும் அளிக்கவேண்டாமா? இந்தியாவிலிருந்து வந்துள்ள புதிய பஸ் ஒன்றையாயினும் இந்தப் பக்கம் ஏன் அனுப்பவில்லை? பழைய பஸ்ஸுகளையே ரிப்பேர் செய்து இங்குவிடவேண்டுமா? போதிய பஸ்ஸுகளை விடாததால், பிரயாணிகள் பஸ் ஸ்டாண்டில் அதிகநேரம் தவங்கிடக்க வேண்டியிருக்கிறதே. இதைப் பற்றி அதிகாரிகள் கவனிப்பார்களா?

மேலும் வண்ணையிலிருந்து நல்லூர் செல்லவேண்டுமானால், பஸ் நிலையத்துக்கு பஸ்ஸிலோ, நடந்தோ சென்று அங்கு பருத்தித்துறை பஸ்ஸுக்கான நீண்ட கியூவரிசையில் நின்று அங்கிருந்து செல்ல வேண்டியுள்ளது. கண்டியிலே உள்ளதுபோல் டவுன் பஸ் முறையை இங்குமேற்படுத்த முடியாதா? தமிழகத்திலே ஒவ்வொரு ஊரிலும் டவுன் பஸ் உண்டு. யாழ்ப்பாணத்திலும் அவ்விதம் செய்ய முடியாதா? என்று விசாரித்தேன் நகரமேயர் இதற்கான முயற்சி எடுத்தால் இது கைகூடலாம் என்று தெரிய வந்தது. மேயர் இதற்கான முயற்சி எடுப்பாரா?

உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு சென்னையில் நடந்தபோது, அங்கு நகரபஸ்ஸுகள் ஒவ்வொன்றிலும் ஒரு குறள் மணியும் திருவள்ளுவரின் அழகிய உருவப்படமும் பொறிக்கப்பட அன்று அலங்கள் ஏற்பாடுசெய்திருந்தார்கள். இன்றும் அதைக் காணலாம்.

யாழ்ப்பாணத்திலும் பஸ்ஸுகளில் குறள் மணிகளை அர்த்தத்துடன் பொறித்து சிவதர்மவள்ளல் விளம்பரம் செய்துள்ளதைக்காண மகிழ்ச்சியாக இருந்தது. விளம்பரத்துடன் இவ்வித நல்ல விஷயங்களையும் கலந்து கொடுப்பது மக்களுக்கு திருக்குறளைத் தெரிந்துகொள்ள, மனத்தூய்மைபெற உதவலாமல்லவா?

0 0

எதிர்பாராதவிதமாக நீர்கொழும்பு முருகமூர்த்தி ஆலய கும்பாபிஷேகத்துக்குச் சென்றிருந்தேன். மக்களின் பக்தி வெள்ளத்திடையே நடைபெற்ற அவ்விழா வைபவங்களையும், அன்பு உள்ளங்களையும் என்னால் மறக்கமுடியாது. நம் மக்களுக்குத்தான் எவ்வளவு பக்தி! ஊர்மக்கள் கும்பாபிஷேகத்துக்காக அள்ளி அள்ளிக் கொடுத்தார்களாம். இரண்டு லட்சம் ரூபாய் செலவில் நடந்துள்ள இத்திருப்பணியால் அவ்வூருக்கே புதிய பொலிவு ஏற்பட்டுள்ளது.

ஆறுமுகஸ்வாமியின் (பஞ்சலோக) விக்கிரகம் தமிழகத்திலிருந்து வந்ததில் தாமதம் ஏற்பட்டுள்ளதாம். சீக்கிரத்தில் அவர் வந்துவிடுவாரென்றும் சில மாதங்களில் மீண்டும் ஒரு கும்பாபிஷேகம் நடக்கலாமென்றும் அறியவந்தேன்.

நாம் கோயிலில் சென்று வழிபடுவதின் நோக்கமென்ன? ஆறுமுகன் தமது கைகளில் வேல் முதலிய ஆயுதங்களை வைத்திருப்பானேன்? நம்முள்ளே இருக்கும் ஆணவங்களையும், உயர்வு-தாழ்வு எண்ணங்களையும், கோபதாபங்களையும் நீக்கி, நம் மனதை சுத்தப்படுத்தவே என்கிறார் பெரியார் சிதாராமசாஸ்திரியார். மனம் வெளுத்தால் தான் திருவருளைப்பெறத் தகுதியடைந்து, நம் வாழ்க்கையும் சிறப்படையும், 'தீயவை புரிந்தாரேனும், முருகவேள் திருமுன்னுற்றால் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை...'

2ம் பக்கம் பார்க்க

## அறிமுகவிழா

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி உயர்தரக் கல்லூரியில் லோகேந்திரலிங்கம் எழுதிய 'போலிகள்' புதுக்கவிதைத் தொகுதிநூல் அறிமுகவிழா எழுத்தாளர் திரு. டானியல் அன்ரனி தலைமையில் நாளை மாலை 3-30 மணிக்கு நடக்கவுள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெல்லொவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம் ஆண்டு ஜூலை 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org